**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 8 October 2025

# இந்தியப் பெருங்கடலுக்குச் செல்லும் வல்லுநர் குழு

பெரிதும் ஆராயப்படாத கிழக்கு இந்தியப் பெருங்கடலில் ஆய்வு மேற்கொள்வதற்காக சிங்கப்பூர், தென்கிழக்காசியா, பசிபிக், அமெரிக்கா ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 21 ஆய்வாளர்கள் குழு செவ்வாய்க்கிழமை (அக்டோபர் 7) 'மரினா அட்கெப்பல் பே'யிலிருந்து புறப்பட்டது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் மற்றும் ஓஷன் எக்ஸ் என்ற லாப நோக்கமற்ற அமெரிக்க நிறுவனத்தின் கூட்டு முயற்சியாக இந்த 24 நாள் ஆய்வுப்பயணம் இடம்பெறுகிறது.

'ஓஷன்எக்ஸ்புளோரர்' எனும் அறிவியல் ஆய்வுக் கப்பலை ஓஷன்எக்ஸ் நிறுவனமே இயக்குகிறது.

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் தேசிய எல்லைக்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ச்சூழல் (பிபிஎன்ஜே) உடன்பாட்டை ஏற்றுக்கொண்டபிறகு சிங்கப்பூர் மேற்கொள்ளும் முதலாவது, பெரிய அளவிலான அறிவியல் ஆய்வுப் பயணம் இது என்று தேசியப் பல்கலைக்கழகமும் ஓஷன்எக்ஸ் நிறுவனமும் ஓர் அறிக்கை வழியாகத் தெரிவித்துள்ளன.

பெருங்கடல்களில் கடல் துறைப் பாதுகாப்புப் பகுதிகளை நிறுவுவது உள்ளிட்ட நடைமுறைகளுக்கு பிபிஎன்ஜே உடன்பாடு வழிவகுக்கிறது.



21 ஆய்வாளர்களுடன் கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதிக்குப் புறப்பட்ட 'ஓஷன்எக்ஸ்புளோரர்' ஆய்வுக் கப்பல். **படம்: ஓஷன்எக்ஸ்**

இம்மாதம் 4ஆம் தேதி 'ஓஷன்எக்ஸ்புளோரர்' ஆய்வுக் கப்பலின் சடங்குபூர்வ வழியனுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், "யோசனைகள், கண்டுபிடிப்புகள், செயல்படுத்துதல் போன்றவற்றைப் பகிர்ந்துகொள்வதாலும் பாதுகாப்பதாலும் உருவாக்கப்படும் உண்மையான மதிப்பில்தான் எதிர்காலம் அடங்கியுள்ளது என்று நம்புகிறேன்," என்று கூறியிருந்தார்.

மேலும், ஆசியான் மற்றும் சிறிய, வளர்ந்துவரும் தீவு நாடுகளின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் பிபிஎன்ஜே உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் சிங்கப்பூர் கடப்பாடு கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.